முதலாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

நாள்.01.04.2026

R.C.O.P No. 2/2019

ம.சா.1- மைதீன் பீவி

1வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை.

எனக்கு மைதீன் பீவி என்ற பெயர் தவிர வேறு பெயர்கள் உள்ளதா என்றால் மைதீன்பீவி கமாலுதீன் என்று எனக்கு அதிகாரபூர்வ ஆவணங்கள் அனைத்திலும் உள்ளது. எனக்கு சொந்த ஊர்ஆளுர் ஆகும். என் கணவர் காஜாகமாலுதீனின் சொந்த ஊர் ஆளுர் ஆகும். 1ம் எதிர்மனுதாரர் ரஷியாவின் சொந்தஊர் ஆளுர் என்றால் சரி. காஜாகமாலுதீனின் அப்பா பெயர் பீர்முகமது என்றால் சரி. 1ம்எதிர்மனுதாரரின் அப்பா பெயர் உஸ்மான். உஸ்மானின் சகோதரி பெயர் முகமது நபீசா என்றால் சரி. அவர் எனது மாமியார் ஆகும். முகமது நபீசாவின் மகன் என்னுடைய கணவர். எனது கணவர் 1ம் எதிர்மனுதாரரின் முறைமாமன் ஆவார். 1ம் எதிர்மனுதாரரின் குடும்ப சூழ்நிலை முழுவதும் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல.

தாராபுரத்தை சேர்ந்த சின்னதம்பி என்ற மீராமைதீனின் மகன் சாகுல்ஹமீது என்பவரை 1ம் எதிர்மனுதார் திருமணம் செய்த விவரம் எனக்கு தெரியாது. எதிர்மனுதாரரின் எதிருரையை நான் படித்து பார்த்தேனா என்றால் பார்த்தேன். எதிருரையில் 1ம் எதிர்மனுதாரரின் திருமணம் குறித்து சொல்லபட்டுள்ள விவரங்கள் குறித்து தேடிபார்த்து தெரிந்து கொண்டேனா என்றால் எனக்க அந்த விவரங்கள் புரியவில்லை அதனால் தெரிந்துகொள்ள முடியவில்லை. 1ம் எதிர்மனுதாருக்கு அகமது சுலைமான் , முகமது சயீன் ஆகிய 2 ஆண் பிள்ளைகள் உள்ளார்கள் என்றால் சரி. நான் வெளிநாட்டில் கணினி சம்பந்தமாக IT developer ஆக 1985 முதல் 2013 வரை நான் பெகரினில் வேலை பார்த்தேன்.

1ம் எதிர்மனுதாரரின் அப்பா உஸ்மான் எனக்கு உறவுமுறை என்றால் சரி. உஸ்மானின் வீட்டிற்கு நான் வந்து செல்வேன் என்றால் சரியல்ல. 2004 ம் ஆண்டு உஸ்மானின் உடல்நிலை மிகவும் மோசமடைந்தது என்றால் எனக்கு தெரியாது. அதனால் 1ம் எதிர்மனுதாரர் அவரது 2 மகன்களுடன் கணவர் வீட்டில் இருந்து அவரது அப்பா வீட்டிற்கு வந்து தங்கினார் என்றால் எனக்கு தெரியாது. 2004 ம் ஆண்டில் நான் பெகரினில் இருந்தேன். முழுவதுமாக இருந்தேனா என்றால் விடுமுறைக்கு வருவேன் எந்த நாட்களில் விடுமுறைக்கு வந்தேன் என்று ஞாபகமில்லை. நான் பெகரினில் இருந்ததால் எனது கணவர் உஸ்மானின் வீட்டிற்கு தாய்மாமன் என்ற முறையில் அடிக்கடி சென்று வந்த விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல அவர் அங்கு செல்லவே இல்லை. 2004 ம் ஆண்டு உஸ்மான் இறந்த விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல எனக்கு தெரியாது. 2004 ம் ஆண்டு என் கணவருக்கு காலில் சுகவீனம் ஏற்பட்டு அவதிபட்டார் என்றால் சரியல்ல. நான் வெளிநாட்டில் இருந்ததால் என் கணவரை 1ம் எதிர்மனுதாரர் கவனித்து பராமரித்து கொண்டார் என்றால் சரியல்ல.

அந்தகாலகட்டத்தில் 1ம் எதிர்மனுதாரர் எங்கு வசித்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. 1ம் எதிர்மனுதாரர் என் கணவரை பராமரித்ததால் 1ம் எதிர்மனுதாரரின் கணவர் அடிக்கடி வந்து 1ம் எதிர்மனுதாரருடன் சண்டை போட்ட விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல அவ்வாறு எந்த சம்பவமும் நடக்கவில்லை. நாகர்கோவில் மேலரதவீதியில் உள்ள 2 ம் எண் கதவு எண் கொண்ட வீட்டில் என்னுடைய கணவர் 1ம் எதிர்மனுதாரரையும் அவரது 2 பிள்ளைகளையும் அமர்த்தினார் என்றால் சரியல்ல. நான் தான் அவர்களை அந்த வீட்டில் அமர்த்தினேன். 15.11.2008 ல் அவர்களை அந்த வீட்டில் அமர்த்தப்பட்டது என்றால் எனக்கு ஞாபகமில்லை. உண்மையில் நான் அவர்களை வீட்டில் வைக்கவில்லை என்றாலும் என்

கணவர்தான் அவர்களை வீட்டில் குடிவைத்தார் என்றாலும் அதனால் என் கணவர் என்னுடன் சண்டை போட்டார் என்றால் சரியல்ல. 2008 நவம்பர் மாதத்தில் நான் எந்த ஊரில் இருந்தேன் என்றால் ஞாபகமில்லை.

எதற்காக 1ம் எதிர்மனுதாரரையும் அவரது பிள்ளைகளையும் அந்த வீட்டில் அமர்த்தினேன் என்றால் நான் பெகரினில் இருந்தபோது 1ம் எதிர்மனுதாரர் எனக்கு போன் செய்து அவரது கணவர் அவரை விட்டு சென்றதாக அழுததால் அந்த வீட்டில் தங்குவதற்கு நான் அனுமதி கொடுத்தேன். அது நாகர்கோவில் வீடாகும் கோட்டாறு வீடு இல்லை. அந்த வீட்டின் கதவு சாவி யாரிடம் இருந்தது என்றால் என் அண்ணனிடம் இருந்தது. என் கணவர் அந்த வீட்டை திறந்து விட்டாரா என்றால் சரியல்ல என் கணவர் என்னுடன் வெளிநாட்டில் வசித்தார். 1ம் எதிர்மனுதாரர் என் கணவருடன் ஏற்பட்ட தொடர்பால் அவரது முதல் கணவருடன் பிரச்சனை ஏற்பட்டு பிரிந்த சென்றதால் குற்ற உணர்வில் 1ம் எதிர்மனுதாரரை என் கணவர் அந்த வீட்டில் குடியிருக்க வைத்தார் என்றால் சரியல்ல.

16.11.2008 அன்று 1ம் எதிர்மனுதாரரின் முதல் கணவரும் அவரது குடும்பத்தாரும் எங்கள் வீட்டில் வைத்து பேச்சுவார்த்தை நடத்தினார்கள் என்றால் சரியல்ல. அந்த பேச்சுவார்த்தையில் 1ம் எதிர்மனுதாரரின் கணவர் முத்தலாக் சொல்லி 1ம் எதிர்மனுதாரரை விவாகரத்து செய்தார் என்றால் எனக்கு தெரியாது. அப்படி சம்பவமே நடக்கவில்லை. 16.11.2008 லிருந்து 1ம் எதிர்மனுதாரரும் என் கணவரும் கணவர் மனைவியாக வாழ்ந்து 1ம் எதிர்மனுதாரரின் குழந்தைகளை என் கணவர்அவரது குழந்தைகளாக பாவித்து வளர்த்தார் என்றால் சரியல்ல. அப்படி சம்பவமே நடக்கவில்லை. 14.12.2009 அன்று என் கணவருக்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் உறவினர்கள் முன்பாக முறைப்படி திருமணம் நடந்தது என்றால் சரியல்ல. அப்படி சம்பவமே நடக்கவில்லை. என் கணவருக்கு வில்லுக்குறி கிராமத்தில் 56

சென்ட்,61 சென்ட், 142 சென்ட் சொத்துக்கள் உள்ளது என்றால் சொத்துக்கள் உள்ளது அதன் விஸ்தீரணம் எனக்கு தெரியாது.

24.3.2011 அன்று என் கணவர் அந்த சொத்துக்களை பாராதீனம் செய்தற்கு 1ம் எதிர்மனுதாரரை பவர்தாரராக நியமித்து பவர் ஆவணம் எழுதி கொடுத்தார் என்றால் சரி. அந்த பவர்பத்திரம் என்பது எங்களுக்க ஒரு வழக்கு நிலுவையில் இருந்ததால் அதை பார்ப்பதற்கும் எங்களுக்கு வரும் பதிவு தபால்களை வாங்குவதற்கும் எழுதினோம். வேறு எந்த காரணத்திற்காகவும் எழுதவில்லை. அந்த பவர்பத்திரம் என் கைவசம் வீட்டில் உள்ளது. குற்றவியல் நீதிதுறை நடுவர் எண்.2ம் நீதிமன்றத்தில் DVCA.No.12/2016 ல் 1ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யபட்டது என்றால் எனக்கு தெரியாது. என் கைவசம் உள்ள பவர்பத்திரத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யமுடியுமா என்றால் என்னிடம் அசல் இல்லை நகல் தான் உள்ளது.

1ம்எதிர்மனுதாரரின் ஆதார் அட்டை குடும்ப அட்டை, வாக்காளர் அட்டை ஆகியவற்யில் என் கணவரது பெயரை முறைப்படி சேர்ப்பதற்கு 1ம் எதிர்மனுதாரரின் முதல் கணவரிடம் இருந்து எழுத்துபூர்வமான தலாக் அறிவிப்பை கேட்டதால் 7.1.2012 அன்று அவரது முதல் கணவர் தலாக் அறிவிப்பை எழுத்துபூர்வமாக தபால் மூலம் அனுப்பி கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. என் கணவர் அவ்வாறு தலாக் அறிவிப்பு கேட்கவில்லை. அதன் பிறகு 1ம் எதிர்மனுதாரரை என் கணவர் தூத்துகுடி மாவட்டம் வசவபுரம் அல்மதினா நகல் மஜித்தூர் ரஹமான் ஜும்மா பள்ளி வாசலில் பதிவு திருமணம் செய்ய 4.4.2012ம் தேதி கூட்டு உறுதிமொழியை இருவரும் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. அப்படி ஒரு சம்பவமே நடக்கவில்லை. அந்த கூட்டுஉறுதிமொழியை ஜமாத்காரர்கள் பரிசீலனை செய்து 24.8.2012ம் தேதி திருமணத்தை பதிவு செய்தார்கள்

என்றால் எனக்கு தெரியாது. திருமணம் நடக்கவே இ ல்லை. 24.8.2012 ம் தேதிக்கு பின் என் கணவர் ஓமன் நாட்டில் குடியிருந்தார் என்றால் சரி.

வில்லுக்குறி கிராமத்தில் என் கணவருக்கு 33 ½ ஏர்ஸ் சொத்து உள்ளது என்றால் சரி. அந்த சொத்தினை பார்க்க என் கணவர் 1ம் எதிர்மனுதாரருக்கு 22.9.2012 ம் தேதி எம்பசியில் இருந்து பவர்பத்திரம் எழுதி அவருக்கு அனுப்பினார் என்றால் சரி. 15.1.2013 தேதிஆளுர் ஜமாதில் எனது கணவரின் 1ம் எதிர்மனுதாரருடனான திருமணத்தை பதிவு செய்ய மனு கொடுத்தார் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரரின் முதல் கணவருடனான விவாகரத்திற்கு அத்தாட்சியை அந்த ஜமாத் 7.2.2013 அன்று கேட்டது என்றால் இல்லை. 2013 ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதத்தில் நான் பெகரினில் இருந்தேன். அதன் பிறகு 16.2.2013 ம் தேதி என் கணவரிடம் இருந்து விவாகரத்து வேண்டி ஆளுர் ஜமாத்திற்கு நான் கடிதம் எழுதினேன் என்றால் சரியல்ல. அந்த கடிதம் நான் எழுதியது இல்லை.

ஆளுர் ஜமாத்தில் திருமணம் பதிவு செய்ய மனு கொடுத்தது தொடர்பாக என் கணவரிடம் நான் கேட்டேனா என்றால் இல்லை. 24.2.2013 தேதி நான் விவாகரத்து கேட்ட கடிதத்திற்கு என் கணவரிடம் விளக்கம் கேட்டார்கள் என்றால் எனக்கு தெரியாது. என் கணவர் அதற்கு விளக்கம் கொடுத்தாரா என்றால் எனக்கு தெரியாது. எனக்கு முகமது உசைன் என்ற சகோதரர் உண்டு. என் சகோதரரை தூண்டிவிட்டு 1ம் எதிர்மனுதாரரிடம் பிரச்சனை செய்தேன் என்றால் சரியல்ல. என் சகோதரர் பிரச்சனை செய்ததால் அவர்மீது காவல்நிலையத்தில் புகார் கொடுக்கபட்டது என்றால் எனக்கு தெரியாது. 17.3.2013 என் சகோதரர் ஆஜராகி இனிமேல் பிரச்சனை செய்ய மாட்டேன் என்று எழுதி கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. என் கணவர் ஜமாத் தலைவரிடம் சந்தித்து தனிநபர் விளக்கம் கொடுத்தார் என்றால் சரியல்ல.

1ம் எதிர்மனுதாரரின் மூத்தமகன் அகமது சுலைமானுக்கு திருமணம் நடந்தது என்றால் சரி. காதல் திருமணம் என்றால் சரி. பெகரினில் இருக்கும்போது 1ம் எதிர்மனுதாரர் என்னிடம் சொன்னார். அந்த திருமணத்தை என் கணவர் முன்னின்று நடத்தினார் என்றால் சரியல்ல. அ ந்த திருமணத்தின்போது என் கணவர் நாகர்கோவிலில் தாமசித்தார் என்றால் சரியல்ல. நாங்கள் யாருமே இங்கு இல்லை. காதல் திருமணம் முடிந்து முகமது சுலைமான் என்னுடைய வீட்டில் தாமசித்தார் என்றால் சரி. நாகர்கோவில் மேலரதவீதியில் உள்ள வீட்டை தவிர 1ம் எதிர்மனுதாரருக்கு வேறு எந்த சொத்துக்களும் இல்லை என்றால் சரியல்ல தாராபுரத்தில் 1ம் எதிர்மனுதாரருக்கு வீடு உள்ளது நாகர்கோவிலில் வீடு இல்லை.

1ம் எதிர்மனுதாரரின் சம்மந்தி 30 லட்சம் ரூபாய் ரொக்கத்தை கொடுத்து மருமகள் பெயரில் வீடு வாங்க சொன்னார் என்றால் எனக்கு தெரியாது. அந்த 30 லட்ச ரூபாயை 1ம் எதிர்மனுதாரரின் 2ம் கணவரிடம் கொடுத்தார் என்றால் சரியல்ல. மனுகட்டிடத்தின் சர்வே எண்.25/21, அகஸ்தீஸ்வரம் கிராமத்தில் பழைய சர்வே எண்.15/21ல் 3 ½ செண்ட் மனை ஆகும். கதவு எண்.99 எ ஆகும். அந்த மனையின் முதல் உரிமையாளர் சேக் உசைன் ஆவார். சேக் உசைனிடன் என் கணவர் விலை ஒப்பந்தம் போட்ட விவரம் எனக்கு தெரியும். அந்த ஒப்பந்த தேதி 22.2.2012 ஆகும். அந்த ஒப்பந்தம் முடிவதற்கு முன்பாகவே மனுகட்டிடத்தின் அனுபவம் என் கணவருக்கு வந்தது என்றால் எனக்கு ஞாபகமில்லை. 22.2.2012ம் தேதி ஒப்பந்தம் போட்ட அன்றே 1ம் எதிர்மனுதாரர்அவரது 2 பிள்ளைகள் மற்றும் மூத்தமகன் மனைவி ஆகியோருடன் காஜாகமாலுதீன் மனுகட்டிடத்தில் வந்து தாமசித்தார் என்றால் சரி. வாடகைக்கு அவர்களை அமர்த்தினார். என் கணவரும் அதே வீட்டில் இருந்தார்.

மனுகட்டிட சொத்தை 2015 ஏப்ரல் மாத நடுவில் கிரய பத்திரம் முடிக்கபட்டது. அந்த மனுகட்டிடத்தின் கிரய பத்திரமானது அகமது சுலைமான் பெயரிலோ அவரது மனைவி

பெயரிலோ முடிக்காமல் என் பெயரில் எழுதப்பட்டது என்றால் நான் வெளிநாட்டில் சம்பாதித்து என் கணவருக்கு பணத்தை அனுப்பி இருந்தேன் அது எங்களுடைய பணம் அதனால் என் பெயருக்கு வாங்கபட்டது. மனுகட்டிடத்தின் கிரயவிலை 7 லட்சத்து 93 ஆயிரம் ஆகும். நான் என் கணவருக்கு ஒரு 10 லட்சத்தை கொடுத்துள்ளேன். விலைபத்திரம் எழுதிய சமயத்தில் நான் வெளிநாட்டில் இருந்தேன் என்றால் சரி. வேலைபளுவினால் வரமுடியவில்லை.

மனுகட்டிடமானது கான்கிரீட் வீடு ஆகும். அந்த வீட்டில் தரைதளத்தில் 1 படுக்கையறையும் முதல்தளத்தில் 3 படுக்கையறையும் உள்ளது. அந்த வீட்டில் எத்தனை ஜன்னல் கதவு மற்றும் சமையலறை உள்ளது என்றால் எனக்கு தெரியாது. அந்த வீட்டின் அமைப்பு எனக்கு முழுவதுமாக தெரியாது என்றால் சரி. எனக்கு மறந்து விட்டது. 1.5.2015 தேதியில் இருந்து 1ம் எதிர்மனுதாரருக்கு 15 ஆயிரம் ரூபாய் வாடகைக்கு கொடுத்தேன், வாடகை ஒப்பந்தம் எழுதினோமா என்றால் இல்லை தெரிந்தவர் என்பதால் வாக்கறாவாக முடித்து கொண்டோம். வாடகை ஒப்பந்தத்திற்கு யாராவது சாட்சி உள்ளார்கா என்றால் எனக்கும் என் கணவருக்கும் மட்டுமே தெரியும் . 3 வது நபர் யாருக்கும் தெரியாது. சாட்சிகள் யாரும் இல்லை. ஆவணங்கள் ஏதும் இல்லை. உண்மையில் வாடகைக்கு நான் கொடுக்கவில்லை என்றாலும் என் கணவர் 1ம் எதிர்மனுதாரரை ஏமாற்றி மனுகட்டிடத்தின் கிரயத்தை என் பெயரில் முடித்துள்ளார் என்றாலும் சரியல்ல.

26.6.2013 ல் திருமணத்தை பதிவு செய்வதற்காக 2000 ரூபாய் நன்கொடையாக என் கணவர் ஜமாத்தில் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. 14.12.2009, ம் தேதி திருமணத்தை நடத்தி 24.8.2012 ம் தேதிஅதனை உறுதி செய்தி all muslim marriage agreement register ல் பதிவு செய்து பாளயங்கோட்டை திருமண பதிவு அலுவலகத்தில் என் கணவர் 1ம்

எதிர்மனுதாரருடனான திருமணத்தை பதிவு செய்து உள்ளார் சரியல்ல. 15.4.2014 ம்தேதி தூத்துகுடி வசவபுரம் அல்மஜிதூர் ரகுமான் ஜும்மா மசூதியில் என்னை, காமாலுதீனின் மனைவி இல்லை என்று பதிவு செய்து சான்று பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. எனக்கு 3 பிள்ளைகள் பீர்முகமது, பாத்திமாபானு, நபிஷா பாபீ ஆகியோர்கள் ஆவார்கள். 17.11.2014 ம் தேதி நானும் என் மகள் நபிஷா பாபியும் 1ம் எதிர்மனுதாரரை தகாத வார்த்தை பேசி அவர்களை கீழே தள்ளி அவரது 7 பவுன் நகையை பறித்து சென்றோம் என்றால் சரியல்ல. அப்போது என் மகள் அமெரிக்காவில் இருந்தார்.

1ம் எதிர்மனுதாரர் என் கணவரை விட்டு செல்லகூடாது என்பதற்காக HDFC காசோலையையும் 25.3.2015 ம் தேதி உறுதிமொழி பத்திரத்தையும் கொடுத்து 1ம் எதிர்மனுதாரரை சமாதானம் செய்துள்ளார் என்றால் சரியல்ல. அதன் பிறகு நானும் என் பிள்ளைகளும் சேர்ந்து என் கணவரை 1ம் எதிர்மனுதாரரிடம் இருந்து பிரிக்க முயற்சிகள் எடுத்தோம் என்றால் சரியல்ல. 25.3.2015 அன்று நானும் என் கணவரும் சேர்ந்து 1ம் எதிர்மனுதாரரை தகாத வார்த்தை பேசி தாக்க முயற்சி செய்தோம் என்றால் சரியல்ல. 28.3.2015 அன்று நானும் வேறு 2 நபர்களும் சேர்ந்து 1ம் எதிர்மனுதாரரை வீட்டை விட்டு காலி செய்ய முயற்சித்தோம் என்றால் சரியல்ல. 28.3.2015 ம் தேதிஎன் மீதும் என் 3 பிள்ளைகள் மீதும் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கபட்டது என்றால் சரியல்ல. உண்மையில் எனக்கு அந்தவிவரங்கள் தெரியும் என்றாலும் என் செல்வாக்கை பயன்படுத்தி நடவடிக்கை எடுக்கவிடாமல் செய்து விட்டதால் காவல்துறை கண்காணிப்பாளரிடம் 31.3.2015 ம் தேதி மனு கொடுக்கபட்டது என்றால் சரியல்ல.

2.4.2015 ம் தேதி நானும் 10 ஆட்களும் சேர்ந்து இரும்பு ஆயுதங்கள் கொண்டு மனு வீட்டின் தரையை இடித்து எதிர்மனுதாரரை பயமுறுத்தி வீட்டை விட்டு காலி செய்யுமாறு

பிரச்சனை செய்தோம் என்றால் சரியல்ல. மகளிர் காவல் நிலையத்தில் தொடர்பு கொண்டு 1ம் எதிர்மனுதாரர் பிரச்சனையை தெரிவித்ததால் என்னையும் 1ம் எதிர்மனுதாரரையும் ஒரே ஜீப்பில் அழைத்து சென்றார்கள் என்றால் சரியல்ல. நான் தான் புகார் கொடுத்தேன். என் வீட்டிற்கு வந்து என்னை 1ம் எதிர்மனுதாரர் தாக்க வந்ததால் நான் புகார் கொடுத்தேன். நான் கொடுத்த புகார்நகலை நான் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். காவல்நிலையத்தில் என்னையும் 1ம்எதிர்மனுதாரரையும் விசாரித்தார்கள் என்றாலும் அதில் என் கணவரை 30.4.2015 ம் தேதிஅழைத்து வருவதாக எழுதி கொடுத்தேன் என்றாலும் ஞாபகமில்லை.

அந்த பிரச்சனைக்கு பிறகு மேலரதவீதியில் உள்ள வீட்டை காலி செய்து மனுகட்டிடத்தில் 30.4.2015 ம் தேதியில் இருந்து 1ம் எதிர்மனுதாரர் தாமசித்து வருகிறார் என்றால் சரியல்ல வாடகைக்காக மாறி சென்றார். உண்மையில் வாடகை முறை இல்லை என்றாலும் 1ம் எதிர்மனுதாரர் 2 வீட்டிலும் மாறி மாறி தாமசித்து வருவார் என்றாலும் தற்போது நிரந்தரமான மனுகட்டிடத்தில் வசித்து வருகிறார் என்றால் சரியல்ல. 7.4.2015 அன்று இரவு 9 மணி நேரத்தில் எனது 2 ஆட்கள் இருசக்கரவாகனத்தில் வந்து 1ம் எதிர்மனுதாரரை மிரட்டினார்கள் என்றால் சரியல்ல. 8.4.2015 அன்று என் மீது கோட்டார் காவல்நிலையத்திலும் காவல்துறை கண்காணிப்பாளரிடமும் புகார் கொடுக்கபட்டது என்றால் சரியல்ல. 28.3.2015 ம்தேதி கொடுத்த புகாருக்க CSR கொடுக்கபட்டது என்றால் சென்னை உயர்நீதிமன்றம் மதுரைகிளையில் CRLOP.(MD) No.6391/2015 மனுதாக்கல் செய்யபட்டது என்றால் எனக்கு தெரியாது. அதன் உத்தரவின் பெயரில் என் மீது குற்ற எண்.17/15 பதிவு செய்யபட்டது என்றால் சரியல்ல.

8.4.2015 ல் கொடுத்த புகாரில் 21.4.2015 ம் தேதி அன்று ஆஜராக எனக்கு அழைப்பாணை வந்தது என்றால் ஞாபகமில்லை. மீண்டும் எனக்கு அழைப்பாணை வந்தது

என்றாலும் நான் ஆஜராகவில்லை என்றாலும் சரியல்ல. 22.5.2015 ,23.5.2015 ஆகிய தேதிகளில் வடசேரி காவல்நிலையத்தில் விசாரணை நடந்தது என்றாலும் 23 ம்தேதி நான் ஆஜரானேன் என்றாலும் சரியல்ல. என் கணவரை நான் மறைத்து வைத்துகொண்டு ஆளூர் மழலையர் பள்ளியில் தாளாளராக 1ம் எதிர்மனுதாரரை பணி செய்யவிடாமல் தடுத்து பிரச்சனை செய்ததால் 28.5.2015 அன்று என் மீது புகார் கொடுக்கபட்டது என்றால் சரியல்ல. 29.5.2015 ம்தேதி மறுபடியும் அதே பிரச்சனை செய்ததால்இரணியல்காவல்நிலையத்தில் 1ம் எதிர்மனுதாரர் புகார் மனு எண்.381/2015 கொடுத்தார் என்றால் சரியல்ல.

புகாரில் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதால்சென்னை உயர்நீதிமன்றம் மதுரைகிளையில் CRLOP.(MD) No.10257/2015 மனுதாக்கல் செய்யபட்டு அதில் புகாரினை விசாரித்து காவல்துறை சார்பில் நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்ததால் மனு முடிக்கபட்டது என்றால் சரியல்ல. நான் ஒப்பு கொண்டு எழுதிகொடுத்தபடி என் கணவரை 30.4.2015 க்குள் மகளிர் காவல்நிலையத்தில் ஒப்படைக்காததால் 29.6.2015 ல் என் மீது மீண்டும் புகார் கொடுக்கபட்டது என்றால் ஞாபகமில்லை. சென்னை உயர்நீதிமன்றம் மதுரைகிளையில் HCP MD No.1024/2015 மனுதாக்கல் செய்தார் என்றால் எனக்கு தெரியாது. என் கணவர்அவரது குழந்தைகளுடன் அமெரிக்காவில் இருப்பதாக காவல்நிலையத்திற்கு கடிதம் அனுப்பியதால் அந்த மனு முடிக்கபட்டது என்றால் எனக்கு தெரியாது. மகளிர் காவல்நிலையத்தில் நான்கொடுத்த புகாரில் 1ம் எதிர்மனுதாரர் வாடகைக்கு குடியிருப்பதாக சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த ஆட்கொணர்வு மனுவில் என்னை விசாரித்தார்களா என்றால் தெரியாது. 3.8.2021 ம் தேதி எதிர்மனுதாரர் தாக்கல் செய்த விவரங்களை படித்து பார்த்து அதன் விவரங்களின் உண்மைதன்மையை நான் விசாரித்து

தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. மனுசொத்தையும் ஆளுரில் உள்ள 16 சென்ட் மனையும் மற்றொரு 12.350 சென்ட் மனையும் உட்படுத்தி அப்துல்ரஹிம் என்பவர் அ.வ.எண்.132/2016 தாக்கல் செய்தார் என்றால் சரி அது தள்ளுபடி செய்யபட்டது. அதில் நான் 3 ம் பிரதிவாதி என்றால்சரி. என் கணவர் 2 ம் பிரதி என்றாலும் 1 ம் எதிர்மனுதாரர் 1 ம் பிரதி என்றாலும் எனக்கு ஞாபகமில்லை. அந்த வழக்கில் நாங்கள் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளோம். அந்த வழக்கில் மனுசொத்தை 1 ம் எதிர்மனுதாரருக்கு வாடகைக்கு கொடுத்ததாக சொல்லபட்டுள்ளதா என்றால் நான் சொல்லவில்லை.

இந்த மனுவில் தாக்கல் செய்யபட்டுள்ள எதிருரையில் அ.வ.எண்.132/2016 சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. என்ன பரிகாரம் கேட்டு அந்த வழக்கு தாக்கல் செய்யபட்டுள்ளது என்று சொல்லபட்டுள்ளது என்றால் சரி ஆனால் அது தவறான விவரமாகும். 2023 ல் மார்ச் அல்லது பிப்ரவரியில் அந்த வழக்கு தள்ளுபடி செய்யபட்டது. இருதரப்பையும் விசாரித்து தீர்ப்பு வழங்கபட்டுள்ளது. குற்றவியல் நீதிதுறை நடுவர் எண்.2.ம் நீதிமன்றத்தில் DVCA.No.12/2016 ல் 1 ம் எதிர்மனுதாரரால் எனக்கு எதிராகவும் என் கணவருக்கு எதிராகவும் தாக்கல் செய்யபட்டது என்றால் சரி. நான் அதற்கு எதிராக எதிருரை தாக்கல் செய்துள்ளேன். அந்த எதிருரையில் 1 ம் எதிர்மனுதாரருக்கு மனுகட்டிடத்தை வாடகைக்கு கொடுத்ததாக சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகமில்லை.

7.3.2023 ம் தேதி அந்த மனுவின் உத்தரவு பகரப்பட்டது என்றால் சரி. அந்த உத்தரவில் மனுதாரருக்கு எந்தவிதமான உடலளவிலும் மனதளவிலும் வேறுவகையிலும் நானும் என் கணவரும் 1 ம் மனுதாரரை தொந்தரவு செய்யகூடாது என்றும் 5 லட்சம் ரூபாய் நஷ்டஈடு கொடுக்க வேண்டியும் மனுசெலவிற்கு 20 ஆயிரம் ரூபாயும் வழங்கபட்டது என்றால் சரி. நாங்கள் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளோம். நான் தாக்கல் செய்த மேல்முறையீட்டு

வழக்கு எண்.CA 32/2023, 1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த வழக்கு எண்.27/2023 வழக்குகளானது நிலுவையில் உள்ளது என்றால் சரி. காஜாகமாலுதீன் என் சட்டபூர்வமான கணவர் என்பதை விளம்புகை கோரி 1ம் எதிர்மனுதாரர் குடும்ப நீதிமன்றத்தில் அ.வ.எண்.57/2023 தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் சரி. உண்மையில் 1ம் எதிர்மனுதாரருக்கும் எனக்கும் இடையே வாடகைதாரர் உரிமையாளர் என்ற உறவு முறை இல்லை என்றாலும் 1ம் எதிர்மானுதாரர் மட்டுமே காஜாகமாலுதீனின் சட்டபூர்வமான மனைவி என்றாலும் சரியல்ல.

12.1.2014 அன்று 1ம் எதிர்மனுதாரரின் 2 வது மகன் முகமது சயினின் திருமணத்தை காஜாகமாலுதீன் தகப்பனார் ஸ்தானத்தில் இருந்து நடத்தி வைத்தார் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரரின் வாக்காளர் அட்டை ஆதார்அட்டை குடும்ப அட்டை, இண்டேன் கேஸ் இணைப்பு ஆகியவற்றில் காஜாகமாலுதீனின் பெயர்தான் கணவர் பெயராக உள்ளது என்றாலும் முகவரி மனுகட்டிட சொத்தின் முகவரியாக உள்ளது என்றாலும் எனக்கு தெரியாது. வாடகை பாக்கிக்காக 1ம் எதிர்மனுதாரரிடம் என்றைக்காவது கேட்டுள்ளேனா என்றால் 2015 ஆகஸ்ட் மாதத்தில் தொலைபேசி மூலமாக தொடர்பு கொண்டேன். அவர் எடுக்கவில்லை.

எனது மனுவில் எந்த தேதியில் 1ம் எதிர்மனுதாரரிடம் வாடகை ஒப்பந்தம் ஏற்படுத்தியதாக சொல்லபட்டுள்ளதா என்றால் இல்லை. வாடகை பாக்கியை தொலைபேசி மூலம்கேட்டதாக மனுவில் சொல்லபட்டுள்ளதா என்றால் இல்லை. வாடகை பாக்கிக்காக வழக்கறிவிப்பு செய்தேனா என்றால் செய்தேன் தேதி மாதம் ஞாபகமில்லை. 14.7.2016 ல் மா.சா,ஆ.2 வழக்கறிவிப்பு செய்துள்ளேனா என்றால் செய்தேன் அந்த அறிவிப்பு அனுப்பியதற்கான அஞ்சலக ரசீது அதை பெற்றுகொண்டதற்கான ஒப்புகை அட்டை

தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை எனது வழக்கறிஞரிடம் தான் கேட்க வேண்டும். வழக்கறிவிப்பை அனுப்பாமலேயே அனுப்பியதாக சொல்லி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மா.சா.ஆ.2 வழக்கறிவிப்பு ஆவணத்தை அவர் படித்து பார்த்து விட்டு அவர் அதை அனுப்பவில்லை என்று கூறுகிறார். மனுகட்டிடத்தை வாடகைக்கு கொடுக்கபடவில்லை என்றாலும் பொய்யான விவரங்களை சொல்லி மனுதாக்கல் செய்துள்ளேன் என்றாலும் மனு தள்ளுபடி செய்யதக்கது என்றாலும் சரியல்ல.